1975 மார்ச் 25]

அரசு உயர்நிலைப்பள்ளி மேலத்திருப்பூந்துருத்தி.

*447. வினு.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மேலத்திருப்பூந்துருத்தி அரசு உயர் நிலைப்பள்ளிப் புதிய கட்டடத்திற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இணைமானியத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு மேற்படி தொகை நிர்வாகப் பொறியாளருக்கு செலுத்தப்பட்டு கட்டிட வேலை துவங்கப்படவுள்ளது.

தொட்டபெட்டா-உதகை இழுவை ரயில்:

*448. வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாப் பயணிகளைக் கவர தொட்டபெட்டா சிகரத்திற்கும், உதகை நகருக்கும் இடையே இழுவை ரயில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தொட்டபெட்டா சிகரத்திற்கும் உதகை நகரத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதையும் அதற்கிடையில் இழுவை இரயில் விட செலவு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இழுவை இரயில் போடுவது என்பது, செங்குத்தான மலையாக இருந்து அதற்குப் போக வேண்டுமானால், அதற்கு இழுவை இரயில் போடலாம். உதகையிலிருந்து தொட்டபெட்டா மூன்றரை-நான்கு மைல் தூரம் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் இழுவை இரயில் போடுவதற்கில்லை. ஆனால்